இதைப்பற்றி அனுதாபத்துடன் கவனிப்பதாகக் கூறினார்கள். மத்திய அமைச்சர் திரு. ஷிண்டே அவர்களும் கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய்வரை கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்னும் அந்த உதவி கிடைக்கும் என்ற நல்ல நம்பிக்கையில் அரசாங்கம் இருக்கிறது. அந்த உதவி கிடைத்தால் பெரிய அளவில் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்.

Public Buildings (Licensing) Act.

* 59 *Q.*—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) the number of buildings for which licence has been obtained from the authorities under the Madras Public Buildings (Licensing) Act; and

(*b*) the steps taken by the Government to enforce the Act?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இச்சட்டத்தின் கீழ் உரிமங்கள் பெற விண்ணப்பம் செய்துகொள்வதற்கான காலவரம்பு அரசாங்கத்தால் 31—3—1969 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

(இ) கால நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதால் இச்சட்டத்தின் விதித்துறைகள் முனைப்புடன் செயல்படுத்தப்படவில்லை.

Coimbatore Headquarters Hospital.

* 60 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether the labour ward in Coimbatore Headquarters Hospital is in a highly insanitary condition; and

(*b*) the reason for the delay in occupying the new buildings that have been built and completed a year ago?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) இல்லை.

(இ) எற்கனவே புதிய மகப்பேறு மருத்துவமனை உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

மதுராந்தகத்தில் முன்சிப் கோர்ட்டு

* 61 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகத்தில் முன்சிப் கோர்ட்டு ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை ஏதேனும் வந்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம் : ஒரு முன்சீப் கோர்ட் ஆரம்பிக்க வேண்டுமென்றால் என்ன அடிப்படைத் தேவைகள் இருக்கவேண்டும்? அந்தத் தேவைகள் இருந்தால் உடனடியாக ஒரு கோர்ட் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மதுராந்தகத்திற்குப் பக்கத்தில் செங்கற்பட்டில் முன்சீப் கோர்ட் இருக்கிறது. மதுராந்தகம் அதிலே இணைக்கப்பட்டிருக்கிறது. தனியாக நீதிமன்றம் வேண்டுமென்றால் ஒரு நீதிமன்றத்திற்குத் தேவையான அளவுக்கு வழக்குகள் அதிகமாக இருக்கவேண்டும் என்று உயர்நீதி மன்றம் விரும்புகிறது.

Bleeding Madras variety of handloom cloth.

* 62 Q.—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Bleeding Madras variety of handloom cloth is in stock for more than 2 years in the co-operative societies in North Arcot district; and

(b) whether quite a large number of handloom weavers are suffering for want of employment thereby and also for want of raw materials?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) இல்லை.

சிறு ரகக் கார்கள் உற்பத்தி

* 63 வின.—திரு. எஸ். ஜே. ராமசாமி
திரு. வை. சுவாமிநாதன் : } மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1968-ம் ஆண்டில் நமது மாநிலத்தில் சிறிய ரக கார் உற்பத்தி செய்ய அனுமதி கோரி விண்ணப்பங்கள் தமிழக அரசுக்கு வந்துள்ளனவா?

(இ) ஆம் எனில், உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ள சிறிய காரின் விலை என்ன?

(உ) உற்பத்தி செய்வதற்கு எந்த ஆண்டிலிருந்து வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) & (உ) வினாக்களுக்கு இடமில்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : முன்பு இருந்த தொழிலமைச்சர் அவர்கள், சிறிய கார் தொழிற்சாலையை சென்னை மாநிலத்தில் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருப்பதாகச் சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எல்லா மாநில அரசுகளும், இப்படிப்பட்ட ஒரு சிறிய கார்த் தொழிற்சாலையைத் தொடங்குவது என்று திட்டக்குழுவும் மத்திய அரசும் முடிவு செய்தால்